# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது

சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001

தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:134:2016 நாள்: 07.05.2016

அன்பார்ந்த தோழர்களே,

## வேலைநிறுத்தம் ஒத்திவைப்பு

பொதுத்துறை வங்கிகளைப் பாதுகாத்திடவும், மக்கள் நலனுக்கு எதிரான சீர்திருத்தங்களையும் எதிர்த்து 25.05.2016 ஒரு நாள் அகில இந்திய வேலைநிறுத்தத்திற்கு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது குறித்த சங்கத்தின் சுற்றறிக்கை மற்றும் சுவரொட்டிகள் ஏற்கனவே வெளியிடப்பட்டு கிளைகளைச் சென்றடைத்துள்ளது.

தற்போது, பிற சங்கங்களும் இந்தப்போராட்டத்தில் தங்களையும் இணைத்துக் கொள்ள முன்வந்துள்ளதால் அது குறித்து விவாதிப்பதற்காக வரும் 11.05.2016 அன்று வங்கி ஊழியர் சங்கங்கள் சந்திக்கவுள்ளன. எனவே, விடுக்கப்பட்டுள்ள 25.05.2016 ஒருநாள் வேலைநிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டத்திற்குப்பின் வேலைநிறுத்தம் குறித்த அறிவிப்பு வெளியிடப்படும்.

### சிறப்பு உதவியாளர் பதவிகள்

அகில இந்திய யூனியன் வங்கி ஊழியர் சங்கத்திற்கும் வங்கி நிர்வாகத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழ் 6 சிறப்பு உதவியாளர் பதவிகளுக்கு கடந்த 03.05.2016 அன்று நடத்தப்பட்ட நேர்காணலின் அடிப்படையில் கீழ்க்கண்ட தோழர், தோழியர்கள் சிறப்பு உதவியாளர்களாக பணி உயர்வு பெற்றுள்ளனர் என்ற தகவலை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்:

| எண். | பெயர் | தற்போதுள்ள கிளை | புதிய கிளை |
|---|---|---|---|
| 1. | தோழர்.**M.சின்னான்** | கிருஷ்ணன் கோவில் | செட்டிகுளம் |
| 2. | தோழர்.**T.துர்கா மாரியப்பன்** | ராமநாதபுரம் | நன்னிலம் |
| 3. | தோழர்.**M.ராஜ்குமார்** | வீரப்பம்பாளையம் | காரையூர் |
| 4. | தோழர்.**M.மாதவன்** | மல்லகுண்டா | திருச்சிற்றம்பலம் |
| 5. | தோழர்.**N.பிரபாகரன்** | நாட்றம்பள்ளி | நாகபட்டினம் |
| 6. | தோழர்.**C.தினேஷ்** | வால்பாறை | வால்பாறை |

இந்தப் பணி உயர்வு நடைமுறையில் கலந்துகொண்டு, வெற்றி பெற்று சிறப்பு உதவியாளர்களான தோழர், தோழியர் அனைவருக்கும் நமது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இதன் பின், காலியாகவுள்ள காசாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, தகுதியான தோழர்கள் நியமிக்கப்படுவர். இவை அனைத்தும், புதிய எழுத்தர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்பாக, அதாவது 30.05.2016க்கு முன்பாக, நிறைவு செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## AIBEA- 70 ஆண்டு நிறைவு

1946ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் நாள் துவக்கப்பட்ட அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் 70ஆண்டுகளை நிறைவு செய்து 20.04.2016 அன்று 71ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. 70 ஆண்டு நிறைவை பல்வேறு சங்கங்கள் பல்வேறு நிகழ்வுகள் மூலம் சிறப்பாக நடத்தின.

நமது சங்கம் 20.04.2015 இரத்த தான முகாமுடன் துவக்கி, 22.04.2016 அன்று இரத்த தான முகாமுடன் 70 ஆண்டு சிறப்பு நிகழ்சிகளை நிறைவு செய்தது. இந்தக் காலகட்டத்தில் மூன்று தொழிற்சங்கப் பயிலரங்குகள் நடத்தப்பட்டன. அகில இந்திய அமைப்பின் சார்பில் மாமல்லபுரத்தில் ஒரு சிறப்பு தொழிற்சங்கப் பயிலரங்கு நடத்தப்பட்டது. திருச்சியில் ஒரு இளைஞர் மாநாடு நடத்தப்பட்டது. சென்னை மற்றும் கோவையில் வாடிக்கையாளர் சிறப்புக்கூட்டம் நடத்தப்பட்டது. தத்தைமஞ்சி என்ற கிராமத்திலுள்ள அரசு நடுநிலைப்பள்ளிக்கு தேவையான மரச்சாமான்கள், உபகரணங்கள் வழங்கப்பட்டன. வேலூரில் முதியோர் இல்லத்திற்கு மின்விசிறிகள் வழங்கப்பட்டன. கரூரில் ஆதரவற்றோர் இல்லத்திற்கு மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன. சேலத்திலுள்ள ஆதரவற்றோர் இல்லத்திற்கு நன்கொடை வழங்கப்பட்டது. கும்பகோணத்திலுள்ள ஆதரவற்றோர் இல்லத்திற்கு இரண்டு மாவாட்டும் இயத்திரங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பில் 70ஆண்டு நிறைவு விழா 19.04.2016 அன்று முழுநாள் நிகழ்வுகள் நேரு விளையாட்டரங்கில் நடைபெற்றது. விளையாட்டு, கலை நிகழ்சிகளில் நமது தோழர்கள் குடும்பத்துடன் கலந்துகொண்டு, பல நிகழ்வுகளில் பரிசும் பெற்றனர்.

## தனியார்மய எதிர்ப்பு தினம்

வங்கிகள் தனியார்மயத்தை எதிர்த்து 01.05.2016 அன்று சென்னை கடற்கரையில், வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் மனிதச் சங்கிலி போராட்டம் நடைபெற்றது.

## AIBEA - மத்திய கவுன்சில் கூட்டம்

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மத்திய கவுன்சில் (General Council) கூட்டம் கடந்த 25.04.2016 அன்று புதுதில்லியில் நடைபெற்றது. நமது

அமைப்பின் சார்பில், நமது பொதுச்செயலாளர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 28வது மாநாட்டை சென்னையில் நடத்திட முடிவு செய்யப்பட்டது. இந்த மாநாடு வரும் 2017 ஜனவரி 8 முதல் 11 வரை நாண்கு நாட்களுக்கு சென்னையில் நடைபெறும்.

தற்போதுள்ள வங்கிகளின் நிலையை கணக்கில் எடுத்துக்கொண்ட மத்திய கவுன்சில் வங்கிகள் இணைப்பு தொடர்பான தனது நிலைபாட்டை மறுபரிசீலனை செய்ய முன்வந்துள்ளது.

## பாராளுமன்றதின் முன்பு தர்னா

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பில் பொதுத்துறை வங்கிகளைப் பாதுகாப்பதற்க்காக 26.04.2016 அன்று பாராளுமன்றத்தின் முன்பு ஒரு தர்னா போராட்டம் நடைபெற்றது. இந்த தர்னாவை வாழ்த்தி கீழ்க்கண்ட தலைவர்கள் உரையாற்றினர்:

- **திரு. திக்விஜய் சிங், பாராளுமன்ற உறுப்பினர், காங்கிரஸ்**
- **தோழர். D.ராஜா, பாராளுமன்ற உறுப்பினர், CPI**
- **தோழர். சந்திரகாந்த் கைரே, பாராளுமன்ற உறுப்பினர், சிவசேனா**
- **தோழியர். அமர்ஜித் கவுர், செயலாளர், AITUC**
- **தோழர். A.K.பத்மநாபன், தலைவர், CITU**
- **தோழர். C.N.ஜெயதேவன், பாராளுமன்ற உறுப்பினர், CPI**
- **தோழர். S.நாகராஜன், பொதுச்செயலாளர், AIBOA**

தர்னா முடிவில், நமது தலைவர்கள் மத்திய நிதி அமைச்சர் அவர்களைச் சந்தித்து நமது கோரிக்கைகளை தெரிவித்தனர். நமது கோரிக்கைகளை பரிசீலிப்பதாக நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## UFBU - கூட்டம்

வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் கூட்டம் கடந்த 13.04.2016 அன்று நடைபெற்றது. அதே தினம் தொழிற்சங்கங்கள் இந்திய வங்கிகள் சங்கப் பிரதிநிதிகளுடம் பேச்சுவார்த்தை நடத்தினர். இது குறித்த ஆங்கில சுற்றறிக்கை தனியாக வெளியிடப்பட்டுள்ளது.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**